

முதலமைச்சர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், கல்லாக்கோட்டை ஊராட்சி, கண்ணுகுடிபட்டி கிராமத்தைச் சேர்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் பலத்த காயமடைந்தவர்களுக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேற்று முன்தினம் (18.07.2024) அவர்களது குடும்பத்தினர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலைகளை வழங்கினார்கள். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில் சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 இலட்சம் நிதி!

## முதல்வரின் உத்தரவிற்கிணங்க அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினர்!

புதுக்கோட்டை, ஜூலை 20 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், கல்லாக்கோட்டை ஊராட்சி, கண்ணுகுடிபட்டி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் பலத்த காயமடைந்தவர்களுக்கு, முதலமை ச்சரின் பொது நிவாரண நிதி வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேற்று முன் தினம் (18.07.2024) அவர்களது குடும்பத்தினர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், வளம்பக்குடி அருகில் 17.07.2024 அன்று கந்தர்வகோட்டையில் இருந்து சமயபுரம் கோவிலுக்கு பாத யாத்திரையாக சென்று கொண்டிருந்தவர்கள் மீது எதிர்பாராதவிதமாக ஈச்சர் வாகனம் மோதிய விபத்தில் புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், கல்லாக்கோட்டை ஊராட்சி, கண்ணுகுடிபட்டியைச் சேர்ந்த முத்துசாமி (வயது 60), திருமதி. ராணி (வயது 37), திருமதி. மோகனாம்பாள் (வயது 27), திருமதி. மீனா (வயது 26) மற்றும் திருமதி. தனலட்சுமி (வயது 36) ஆகிய 5 நபர்கள் உயிரிழந்தனர்.

மேலும் இவ்விபத்தில், பலத்த காயமடைந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திருமதி. சங்கீதா என்பவர் அனுமதிக்கப்பட்டு சிறப்பு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் முதலமைச்சர் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் பலத்த காயமடைந்தவரின் குடும்பத்தினர்களை நேற்று முன்தினம் (18.07.2024) நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், கந்தர்வக் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, வட்டாட்சியர் திருமதி.விஜயலட்சுமி, மங்களாபுரம் ஊராட்சிமன்றத் தலைவர் பரமசிவம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் (18.07.2024) ஜூன் 2024ஆம் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை) மாவட்ட வருவாய் அலுவலர்/ தனித்துணை ஆட்சியர் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடந்த நிதி ஆண்டினைக் காட்டிலும் நடப்பாண்டில்

# பதிவுத்துறையில் வருவாய் ரூ.821 கோடி அதிகரிப்பு!

## அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தகவல்!

சென்னை,ஜூலை 20 -

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் (18.07.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் 2024ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்/தனித்துணை ஆட்சியர் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தின் போது பதிவுத்துறையில் பணியின் போது மறைவுற்ற இரண்டு பணியாளர்களின் வாரிசுதார்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை அமைச்சர் வழங்கினார்.

பதிவுத்துறையில் நிகழும் நிதி ஆண்டில் (2024-2025) (17.07.2024) வரை ரூ.5,920 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த நிதி ஆண்டின் வருவாய் உடன் ஒப்பிடுகையில் ரூ.821 கோடி அதிகம் ஆகும்.

அமைச்சர் அவர்களின் கடந்த ஆலோசனை கூட்ட அறிவுறுத்தலைத் தொடர்ந்து, அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும் அங்கீகாரமற்ற மனைப்பிரிவை பதிவு செய்த அலுவலர்கள் கண்டறியப்பட்டு அவர்கள் மீது துறை ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தொடர்ந்து அங்கீகாரமற்ற மனைப்பிரிவை பதிவுசெய்யும் அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு திடீர் ஆய்வு செய்து பதிவுக்கு வரும் பொது மக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் ஆவணம் பதிவு செய்தல், ஆவணங்களை உரிய நேரத்தில் ஒப்படைத்தல், போலி மற்றும் அங்கீகாரமற்ற மனைப்பிரிவு பதிவுகளை தடுத்தல் உள்ளிட்ட பணிகளை தொடர்ந்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் அறிவுறுத்தினார்.

### மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஒன்றியத்தில்

# 530 பயனாளிகளுக்கு ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தில் வீடு கட்டுவதற்கான ஆணை!

## அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் வழங்கினார்! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஜூலை 20 -

மயிலாடுதுறை மாவட்டம்,சீர்காழியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் சீர்காழி ஒன்றியத்தில் 530 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகட்டுவதற்கான ஆணைகளையும்,மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வு வினா,விடை கையேடுகளையும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் வழங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் 530 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகட்டுவதற்கான ஆணைகளையும், 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வு வினா,விடை கையேடு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சீர்காழி ஒன்றிய குழு தலைவர் கமல ஜோதிதேவேந்திரன் வரவேற்றார். நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சீர்காழி ஒன்றியத்தில் உள்ள 530 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகட்டுவதற்கான ஆணைகளையும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 10 மற்றும் 12ம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு பொதுத் தேர்வுக்கான வினா, விடை கையேடு வழங்கி பேசுகையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குடிசை இல்லா மாநிலமாக தமிழ்நாடு மாற்ற வேண்டும் என்ற நோக்கோடு குடிசை வீடுகளை மாற்றி காங்கிரட் வீடுகளாக மாற்றி தர வேண்டும் என்ற உயர்ரிய நோக்கோடு செயல்படுத்திடும் விதமாக வீட்டுக்கு ரூ.3.50,000 என்று இந்த ஆண்டு ஒரு லட்சம் வீடு கட்ட ரூ 3,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களில் கலைஞரின் கனவு இல்லம் என்பது தமிழக மக்களால் மிகப்பெரிய வரவேற்பை பெற்றிருக்கின்றது. தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் 38 மாவட்டங்கள் உள்ளன. அதில் நமது மயிலாடுதுறை மாவட்டத்திற்கு மட்டும் கிட்டத்தட்ட 3000 வீடுகளுக்கு ரூ.105 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதில் இங்கு இருக்கின்ற சீர்காழி ஒன்றியத்தில் 530 வீடுகளுக்கு ரூ.18 கோடி மதிப்பிலான பணி ஆணைகளை வழங்க உள்ளோம். ஒவ்வொருவருக்கும் சொந்த வீடு என்பது மிக முக்கியமானது. .இரண்டு ஆண்டுகளுக்கு முன் மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி, செம்பனார் கோயில், கொள்ளிடம் ஒன் றிய பகுதிகளில் இரண்டு நாளில் 50 சென்டிமீட்டர் மழை பெய்து மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இது போன்ற பாதிப்புகள் இருக்கக் கூடாது என்பதற்காக தான் குடிசை வீடுகளாக உள்ளதை காங்கிரீட் வீடுகளாக மாற்றும் திட்டத்தை கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள். குறிப்பாக முதலமைச்சர் கிராம சாலை திட்டத்திற்கு 2022 - 2023ஆம் ஆண்டில் ரூ.62 கோடியில் சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டுபணிகள் நடைபெற்று வருகிறது. 2024-2025 ஆண்டிற்கு ரூ 66 கோடியில் சாலை பணிகள் தொடங்கப்பட்டு முதற்கட்டமாக ரூபாய் 20 கோடியில் மேற்கொள்ளப்பட்டு உள்ளது அடுத்த கட்டமாக ரூ. 46 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. சீர்காழி அரசு மருத்துவமனைக்கு ரூபாய் 23 கோடியில் கட்டிடங்கள், முதலைமேடு பகுதியில் புயல் பாதுகாப்பு மையம் என பல்வேறு திட்டங்களை நம்முடைய முதல்வர் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு செயல்படுத்தி வருகிறார். அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் மக்களுடன் முதல்வர் என்ற மகத்தான திட்டத்தை முதலில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சியில் செயல்படுத்தி னார்கள் 30 நாளில் நீங்கள் கொடுக்கும் மனைவிக்கு தீர்வு காணும் வேண்டுமென்ற அந்த அந்த திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்.. இப்போது மற்றொ ருவன் முதல்வர் திட்டம் ஊராட்சிபகுதிகளும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுடைய முதலமைச்சர் தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காகவும்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டு வருகிறார் கடந்தாண்டு நாகப்பட்டினத்தில் ஆய்வு மேற்கண்ட போதுஅப்போது மயிலாடுதுறை மாவட்டத்தில் கல்வி வளர்ச்சி பின் தங்கியுள்ளது என்பதை அறிந்து கல்வி வளர்ச்சியை உயர்த்திட வேண்டும் என்ற நடவடிக்கை மேற்கொண்டு என்று முதலமைச்சர் வைத்த கருத்தின் அடிப்படையில்மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், ,நாடாளுமன்ற உறுப்பினர், கல்வித் துறை அதிகாரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கல்விற்கான வளர்ச்சி பணிகளை மேற்கொண்டு எடுத்த நடவடிக்கையால் 37ம் இடத்தில் இருந்து 2 tம் இடத்திற்கு 10 இடங்கள் முன்னோக்கு சென்றுள்ள்ளது.

சீர்காழி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 530 பயனாளிகளுக்கு தலா ரூ.3 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் புதிய வீடுகட்டு வதற்கான ஆணைகளையும், மயிலாடுதுறை மாவட்டத்தில் கொடையாளர்கள் பங்களிப்புடன் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு 38,500; கற்றல் கையேடுகளையும், 12ம் வகுப்பு மாணவர்களுக்கு 38,831 கற்றல் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கே.ஜி. சீனிவாசன், உமா மகேஸ்வரி சங்கர், செல்லசேதுரவிகுமார், மங்கை எம். சங்கர், ஏ.ஜி ஜெ. பிரபாகர், பஞ்சு குமார், ப.முருகமணி, ஏ.ஆர். ராஜா, கு.வைத்தியநாதன், ம.சுப்பராயன், குண்டாமணி எ) செல்வராஜ், மற்றும் முத்து தேவேந்திரன், வி.எஸ். என்.செந்தில், ஜெயபிரகாஷ், உஷாநந்தினி பிரபாகரன், எஸ்.ஆனந்தன், தியாகவிஜேஸ்வரன், மு.ஷபீர், மு.மணிமேகலை, உ.அர்ச்சனா, சங்கர், ரமேஷ்பாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி தேவபண்டலம் கிராமத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்றது,இதில் வடக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் தா.உதயசூரியன் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார்,இதில் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில்

# காரைக்குடியில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு சிறப்புப் பட்டிமன்றம்!

## நடுவர்: சுகிசிவம் ! முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் – நிகழ்ச்சி ஏற்பாடு!

காரைக்குடி, ஜூலை 20 -

அளவற்ற அன்பும் நிகரற்ற கொள்கைப் பற்றும் ஈடற்ற உழைப்பும் மாசற்ற மாண்பும் தகைசால் தலைமைப் பண்பும் தன்னகத்தே கொண்டிருக்கும் தன்னரிகரில்லாத் தலைவர் - ஒப்பில்லா திராவிட மாடல் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் 1998ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் துவக்கி வைக்கப்பட்டது, காரைக்குடி கலைஞர் தமிழ்ச் சங்கம்!

கலைஞர் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் 27.7.2024 அன்று மாலை 4.00 மணியளவில் காரைக்குடி பி.எல்.பி. திருமண மண்டபத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை வகிக்கிறார்.

கலைஞர் தமிழ்ச் சங்கப் புரவலர் பழ.படிக்காசு முன்னிலை வகிக்கிறார்.

காரைக்குடி மாநகராட்சி மேயர் சே.முத்துத்துரை வரவேற்புரையாற்றுகிறார்.

திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., சா.மாங்குடி எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., சுப.துரைராசு, காரைக்குடி மாநகராட்சி துணை மேயர் நா.குணசேகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பா.செந்தில் குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

காரைக்குடி கலைஞர் தமிழ்ச்சங்க நிறுவனர் - முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் துவக்கவுரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வில் - கலைமாமணி சுகிசிவம் அவர்களை நடுவராகக் கொண்டு - “கலைஞரை உலகம் புகழப் பெரிதும் காரணம் - எழுதுகோலே! செங்கோலே!” எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறுகிறது.

“எழுதுகோலே!” எனும் தலைப்பில், திருமதி தெ. சாந்தமணி, எழுத்தாளர் லெட்சுமணப் பெருமாள், கவிஞர் திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோரும்-

“செங்கோலே!” எனும் தலைப்பில் - கவிஞர் மதுக்கூர் இராமலிங்கம், முனைவர் திருமதி எழிலரசி, செ.மோகனசுந்தரம் ஆகியோரும் வாதிடுகின்றனர்.

கலைஞர் தமிழ்ச் சங்கச் செயலர் தி.செந்தில்குமார் நன்றி கூறகிறார்.

“முத்தமிழறிஞர் கலைஞரின் தமிழ்ச் சொந்தங்களே! தமிழ் ஆர்வலர்களே! இந்நிகழ்வில் பங்கேற்க வருக! வருக!” - எனகலைஞர்தமிழ்ச் சங்கத்தின் நிறுவன ரும், விழா ஏற்பாட்டாளருமான மு.தென்னவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஆள்கடத்தல், கொலை மிரட்டல் வழக்கிலும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கைது!

கரூர், ஜூலை 20 –

100 கோடி ரூபாய் நில மோசடி புகாரை தொடர்ந்து ஆள்கடத்தல், கொலை மிரட்டல் வழக்கிலும் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கரூரில் தனது 100 கோடி ரூபாய் மதிப்பிலான 22 ஏக்கர் நிலத்தை போலி ஆவணம் தயாரித்து அபகரித்துவிட்டதாக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீது, அக்கட்சியைச் சேர்ந்த பிரகாஷ் என்பவர் காவல்துறையில் புகார் அளித்திருந்தார். இதுதொடர்பாக சி.பி.சி.ஐ.டி., விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில், 40 நாட்களுக்கும் மேலாக தலைமறைவாக இருந்த எம்.ஆர்.விஜயபாஸ்கரை கேரளாவில் சி.பி.சி.ஐ.டி., காவல்துறை யினர் அதிரடியாக கைது செய்தனர். அவருடன் பிரவீன் என்பவரும் கைது செய்யப்பட்டார். இருவரையும் தமிழ்நாட்டுக்கு அழைத்து வந்த காவல்துறையினர், பல மணி நேர விசாரணைக்கு பின்பு, நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், ஆள்கடத்தல், கொலை மிரட்டல் வழக்கிலும் எம்.ஆர். விஜயபாஸ்கர் கைது செய்யப்பட்டுள்ளார். நிலத்தின் உரிமையாளரும், அ.தி.மு.க. பிரமுகருமான பிரகாஷ், கரூர் மாவட்டம் வாங்கல் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் எம்.ஆர்.விஜயபாஸ்கரை போலீசார் கைது செய்துள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் நாட்டார் மங்கலத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டம்தொடக்க விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு திட்டத்தை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதைஆய்வு மேற்கொண்டார். உடன் ஆரணி எம்.பி .தரணி வேந்தன், மயிலம் எம்.எல்.ஏ .சிவகுமார், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி,வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் உள்ளனர்.